குழந்தைகளுக்கான

# இன்பத் தமிழ்ப்பாடல்கள்

பண்டிதர். திரு.க. மயில்வாகனனார்

முதற்பதிப்பு : 1988

மீள்பதிப்பு : 27.01.2019

அட்டைப்படம் : எல்-4 நிறுவனம்

நூல் வடிவமைப்பு: ஓவியவாருதி இ. குணதாசன் (நோர்வே)

நூல் மீளுருவாக்கம் : பண்டிதர் மயில்வாகனனார் அறக்கட்டளை

நூலாசிரியர்: கலாபூசணம், புலவர்மணி, நாற்கவிராசர்

கலைவாருதி, செந்தமிழ்ச்செல்வர்

பண்டிதர் க. மயில்லாகனனார்



பண்டிதர் க. மயில்லாகனனார் நூற்றாண்டுவிழா வெளியீடு

பாரிஸ், பிரான்ஸ்

வெளியீடு: எல்-4 நிறுவனம்

**El-4.com**

# குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்ப் பாடல்கள்

உள்ளே:


| | | |
|---|---|---|
| 1. | பாலர் நாங்கள் | 04 |
| 2. | இறைவன் | 05 |
| 3. | சூரியன் | 06 |
| 4. | சந்திரன் | 07 |
| 5. | மழை | 08 |
| 6. | ஆறு | 09 |
| 7. | பூஞ்சோலை | 10 |
| 8. | மாந்தோப்பு | 11 |
| 9. | கொஞ்சும் மழலை | 12 |
| 10. | மாமா தந்த மாலை | 13 |
| 11. | கூவும் குயில் | 14 |
| 12. | பச்சைக்கிளி | 15 |
| 13. | ஆடும் மயில் | 16 |
| 14. | அசையும் யானை | 17 |
| 15. | படம் விரிக்கும் பாம்பு | 18 |
| 16. | கடல் | 19 |
| 17. | மாலைக்காட்சி | 20 |
| 18. | கரையும் காகம் | 21 |
| 19. | சிங்கராசன் | 22 |
| 20. | கடலில் போகும் கப்பல் | 23 |
| 21. | பிச்சைக்காரி | 24 |
| 22. | மரமும் சிறுவனும் | 26 |
| 23. | விலங்குக் காட்சிச்சாலை | 27 |
| 24. | சிங்கமும் சுண்டெலியும் | 29 |
| 25. | ஆடும் நரியும் | 31 |
| 26. | காவற் குரங்கு | 33 |
| 27. | காந்தித்தாத்தா | 35 |
| 28. | டாக்டர். டி.பி. ஜாயா | 36 |
| 29. | விபுலானந்த சுவாமி | 37 |

## பாலர் நாங்கள்.........



பாலர் நாங்கள் கூடுவோம்
பாடிப் பாடி ஆடுவோம்
எங்கள் தமிழ் வாழியே
எங்கள் தமிழ் வாழியே - பாலர்
இன்பத் தமிழ் ஏந்தியே
இங்கு கூடிப் பாடுவோம் - பாலர்
தேனைப் போல இனித்திடும்
சிந்தை மகிழ் வெய்துவோம் - பாலர்
பாகைப் போலச் சுவைத்திடும்
பாடி மகிழ் வெய்துவோம் - பாலர்
அறிவினோடு ஒழுக்கமும்
அரிய பண்பும் தேடுவோம் - பாலர்

# இறைவன்



உண்மை அன்பின் வடிவோனே
உலகுக் கெல்லாம் முதல்வோனே
எண்ணும் வரங்கள் தருவோனே
எல்லோ ருக்கும் இனியோனே

நண்ணும் துயரந் தீர்ப்போனே
நல்ல கல்வி ஈவோனே
தண்ணார் பாத கமலங்கள்
தலைமேல் வைத்துத் தொழுவோமே.

# சூரியன்




வட்ட மான சூரியன்
வாழ்வு தருஞ் சூரியன்
எட்டி வான வீதியில்
எழுந்து மெல்ல வருகிறான்

கொடிய இருள் சென்றது
கோழி காகங் கூவுது
விடியல் கண்டு மக்களும்
விழித் தெழுந்து நிற்கிறார்

பந்து போன்ற சூரியன்
பார்க்கப் பார்க்கக் கூசிறான்
வந்து வானில் நின்றுமே
வைய கத்தைப் பார்க்கிறான்.

# சந்திரன்



தண்கதிர் வந்தது தண்கதிர் வந்தது
தண்கதிர் வந்த தம்மா
தங்கக் குடத்தில் கிடந்த அமுதைத்
தானுங் கொட்டு தம்மா

வெள்ளை நிலாவொளி சிந்திச் சிதறி
விரைந்து பாயு தம்மா
கொள்ளை இன்பங் கொண்டு நெஞ்சங்
குதித்துத் துள்ளு தம்மா

பாட்டி ஔவை அங்கி ருந்து
பாட்டுப் பாடு கின்றார்
ஆட்டம் ஆட எங்க ளுக்கும்
ஆசை ஆகு தம்மா

# மழை



மழையே மழையே மெத்தப்பெய்
மண்ணிட மெல்லாம் மகிழப்பெய்

கடலின் நீரைக் குடிக்கின்றாய்
கறுத்து வானில் உயர்கின்றாய்
மின்னி முழங்கி நிற்கின்றாய்
மேவி எங்கும் பொழிகின்றாய் - மழை

ஆற்றில் கடலில் பெய்கின்றாய்
அக்கம் பக்கம் செழிக்கப்பெய்
கேணி குளத்தில் பொழிகின்றாய்
கீழும் மேலும் நனையப்பெய் - மழை

நெல்லொடு தானியம் விளையப்பெய்
நீர்நிலை எல்லாம் நிறையப்பெய்
மரமும் கொடியும் வளரப்பெய்
மாநில மெல்லாஞ் செழிக்கப்பெய் - மழை.

# ஆறு

ஆற்றங் கரைதனிலே - ஒருநாள்
ஆறுத லாயிருந்தேன்.
மேற்றிசை வானதிலே - கதிரோன்
விந்தை புரிந்து நின்றான்.

பளிங்கை நீராக்கி - உருக்கிப்
பரப்பி விட்டதுபோல்
தெளிந்த நீரோடும் - அழகின்
சிறப்பை ஏது சொல்வேன்.

தண்மலர் ஏந்திவந்தே - ஈசன்
தாளில் இறைப்பவர் போல்
வெண்ணுரை கொண்டுவந்தே - கரையில்
விட்டு நடத்தல் கண்டேன்.



ஓடிவரு நதிதான் - அங்கே
உற்றிடும் ஆனைகளைத்
தாயென நீராட்டித் தழுவும்
தன்மையை ஏது என்பேன்.

மாமலை உச்சியிலே - தானும்
வாரி வரு பொருளை
ஏவரும் பெற்றிடவே - வழங்கும்
இயல்பை ஏத்திடுவோம்.

## பூஞ்சோலை



சோலை நல்ல சோலையாம்
சுகந்தரு பூஞ் சோலையாம்

மாலை நேரம் மக்கள்கூடி
மகிழுகின்ற சோலையாம்

மல்லிகை மலர்கள் உண்டு
மந்தாரைப் பூவுமுண்டு

அல்லியுடன் சாமந்தி
அழகு ரோசா தானுமுண்டு

செவ்வரத்தைப் பூவுண்டு
செந்தா மரையு முண்டு

ஊஞ்ச லுண்டு ஆடலாம்
உருளை உண்டு சுற்றலாம்

பந்தலுண்டு இருக்கலாம்
பார்த்துப் பார்த்து மகிழலாம்.

# மாந்தோப்பு



வானினை எட்டிப் பிடித்திட - என்று
வளர்ந்திடு மாமரத் தோப்பிதுவாம்
தேனினை வென்ற கனிபல - தந்திடு
சிங்கார மாமரத் தோப்பிதுவாம்.

கூடும் பறவை இனங்களின் - கூடுகள்
கொம்பரில் தொங்குமாந் தோப்பிதுவாம்
ஓடும் அணில்பல காய்களைக் கொந்தி
உதிர்த்திடு மாமரத் தோப்பிதுவாம்.

கூவுங் குயில்கள் புகுந்து - தளிரைக்
கோதிடும் மாமரத் தோப்பிதுவாம்
மேவிச் சிறுவர்பைங் காய்களைக் - கல்லால்
வீழ்த்திடு மாமரத் தோப்பிதுவாம்.

கோலக் கிளிகள் இருந்து - மகிழ்ந்தே
கொஞ்சிக் குலாவுமாந் தோப்பிதுவாம்
மாலையில் கெந்தி அடித்துச் - சிறுவர்
மகிழ்ந்து விளையாடு தோப்பிதுவாம்.

# கொஞ்சும் மழலை



அம்மா அம்மா அம்மா

அம்மா அம்மா அம்மா
அன்பான அம்மா
என்னை ஈன்ற அம்மா
எனக்கு நல்ல அம்மா

கண்ணைப் போல நாளும்
காத்துவரும் அம்மா
கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்
குலாவி மகிழ் அம்மா

பாடஞ் சொல்லித் தருவார்
பட்சணங்கள் தருவார்
அம்மா அம்மா அம்மா
அன்பான அம்மா

பட்சணம் = தின்பண்டம்

## மாமா தந்த மாலை



மாலை மாலை மாலை
மாமா தந்த மாலை

காசு கொடுத்துக் கொண்ட மாலை
கழுத்துக் கினிய மாலை - மாலை

தேசம் புகழும் மணிகள் கோத்துச்
செய்த நல்ல மாலை - மாலை

ஆசை யோடு கட்டிக் கொள்ள
அம்மான் தந்த மாலை. - மாலை

## கூவு குயிலே



கூவு குயிலே வந்து
கூவு குயிலே - நல்ல
குழந்தை என்னோடு நின்று
கூவு குயிலே

தாவிப் பறந்து பறந்
தெங்கு போகிறாய் - கொஞ்சம்
தனித்து வந்தென்னோடு
பேசு குயிலே

மாரிமழை வந்தபோது
வாடி நிற்கிறாய் - நல்ல
வசந்தம் எழுந்தவுடன்
கூவி நிற்கிறாய்

ஆரும் உனக்கு ஈடு
இல்லை இல்லையே - எனக்(கு)
அருகிலே வந்திருந்து
கூவு குயிலே.

# பச்சைக் கிளி




பச்சைக் கிளியே அஞ்சுகமே
பழத்தைக் கோதும் அஞ்சுகமே
உச்சிக் கொம்பில் உட்கார்ந்தே
ஊஞ்ச லாடும் அஞ்சுகமே

வட்ட மான ஆரத்தை
வாங்கித் தந்தார் ஆரம்மா
எட்டி எட்டிப் பறந்துநீ
எங்கே போகப் போகின்றாய்

பாலும் பழமும் தருவேன்நான்
படுக்க மெத்தை தருவேன்நான்
கோலக் கிளியே வா அம்மா
கொஞ்சிக் கொஞ்சிப் பேசிடுவோம்.

# ஆடும் மயில்




நீல நிறப்புள்ளித் தோகை விரித்துநீ
நின்று கூத்தாடுகிறாய் - மயிலே
நின்று கூத்தாடுகிறாய் - நீல

காட்டில் அலைந்து திரியாமல் எங்கள்
வீட்டிற்கு வந்திடுவாய் - மயிலே
வீட்டிற்கு வந்திடுவாய் - நீல

மேகத்தைக் கண்டு மகிழ்ந்துநின் றாடிடும்
வேடிக்கை ஏதம்மா - மயிலே
வேடிக்கை ஏதம்மா - நீல

அண்டி யயல்நின் றகவிக் கூவிட
ஆசை யாகுதம்மா - மயிலே
ஆசை யாகுதம்மா - நீல

## அசையும் யானை



மலை அசையுது பார் - கரு
மலை அசையுது பார்
நிலமதின் மேலே - யானை
மலை அசையுது பார் - மலை

சுற்றுப் புறமெல்லாம் - கையைத்
தூக்கி அசைக்குது பார்
பற்றித் தழைகுழையை - அது
பறித்துத் தின்னுது பார் - மலை

கொழுகொழு என்ன - உரல்போல்
கூடும் கால்களைப் பார்
சுளகினைப் போலே - அங்கு
துடிக்குஞ் செவிகள் பார் - மலை

குறுகு கண்ணினைப் பார் - அதன்
கோட்டின் அழகு பார்
அறியும் பாகன் பார் - அவன்
அமரும் அழகு பார் - மலை

## படம் விரிக்கும் பாம்பு



பாம்பு பாம்பு பாம்பு
படம் விரிக்கும் பாம்பு

மகுடி ஓசை முன்னே
மகிழ்ந்து ஆடும் பாம்பு

குறவன் சொல்லைக் கேட்டுக்
குடத்துள் புகும் பாம்பு

தீய விடப் பாம்பு
சீறிப் பாயும் பாம்பு

பல்லுப் போன பாம்பு
பால் குடிக்கும் பாம்பு.



**கடல்**

நீலவிழிக் குதலைமொழி
சிறுவர்களே வாரும்
நின்றுகொஞ்சம் என்கதையைச்
சொல்லுகிறேன் கேளும்

கடப்பதற்கே அரியவன்நான்
ஆதலினால் தானே
கடல் என்ன என்னையுமே
சொல்லுகிறார் காணீர்

நீர்உடுத்தி அலைசிதறி
நுரைசுமந்து வருவேன்
நீலநிற வானையொட்டி
நிமிர்ந்துநின்று பிடிப்பேன்

மீனினமும் சங்கினமும்
என்னிடத்தில் உண்டு
மேலான முத்தினமும்
ஆம்பல்களும் உண்டு

ஓடம்என்ன கப்பல்என்ன
ஓடுமெந்தன் மேலே
உயர்ந்து சென்று முகிலாகி
மழையினையும் தருவேன்.

# மாலைக் காலம்



மாலை வந்தது மாலை வந்தது
மாலை வந்த தடா
மேலைக் கடலில் கதிரும் மூழ்க
மாலை வந்த தடா

பட்சி சாலம் கூட்டை நாடிப்
பறந்து செல்லுதடா
எட்டுத் திசையும் மெல்ல மெல்ல
இருள் பரவு தடா - மாலை
அந்தி மலர்கள் அவிழ்ந்து நின்று
ஆசை காட்டு தடா
கந்தன் கோயில் மணியின் ஓசை
காதில் கேட்குதடா - மாலை

கறவை மாடு குரலெ ழுப்பிக்
கன்றைத் தேடு தடா
உறவு கொண்ட வீட்டை எண்ணி
உழவர் வருகின்றார் - மாலை

அம்மா தீபம் ஏற்றி வைக்க
அப்பா பாடுகின்றார்
கம்மென் வாசம் எழுந்து எங்கும்
கலந்து நிற்குதடா - மாலை

## கரையும் காகம்



காலையிலே பாட்டிசைப்பீர் காக்கையாரே
கண்விழித் தெழுகின்றோம் காக்கையாரே
மாலையில் உறங்குவீர் காக்கையாரே
மக்களும் உறங்குவார் காக்கையாரே

ஓயா துழைக்கிறீர் காக்கையாரே
உள்ளம் மகிழுதே காக்கையாரே
நேயம் புரிகின்றீர் காக்கையாரே
நெஞ்சம் இளகுது காக்கையாரே

அச்சமிலாதுமே காக்கையாரே
அழுக்கை அகற்றுவீர் காக்கையாரே
இச்செயலுக்கு ஈடுண்டோ காக்கையாரே
எவரோ பெரியவர் காக்கையாரே.

## சிங்கராசன்



பருத்ததலை கடுத்தமுகம்
இடித்தகுரல் உடையேன்
பதுங்கிநின்று விலங்குகளைப்
பாய்ந்துகொன்று தின்பேன்

எடுத்தஇரை தனையடிப்பேன்
முன்னங்கா லினாலே
என்நகமும் கோரப்பல்லும்
கிழித்திடவே உதவும்

அடுத்தபசி வந்தபோது
விலங்குகளை அடிப்பேன்
அல்லாதபோது வேட்டை
ஆடுவதை விடுப்பேன்

கழுத்தினிலும் பிடரியிலும்
நீண்டமயிர் கொண்டேன்
காட்டினிலே வாழ்ந்திடுவேன்
சிங்கராசன் என்பேர்.

## கடலில் போகும் கப்பல்



போகுதடா - கப்பல் போகுதடா
தத் தெய் தாம் - ஏலவலே தத் தெய் தாம்

நீலக் கருங்கடல் நீரைக் கிழித்து
நிறையவே பண்டங்கள் ஏற்றிச் சுமந்தே - போகுதடா

ஓவென் றிரையும் கடுங்காற்றுச் சுற்றி
ஓடியே மோதிக் கிழிக்குது பாய்தனை - போகுதடா

எற்றுந் திரைகள் மலைபோல் எழுந்தே
எங்கணும் மோதி உதைக்குது கப்பலை - போகுதடா

கப்பலின் மாலுமி கண்டு கடலிலே தப்பாமல் நங்கூரம்
தன்னையே தள்ளுறான் - போகுதடா

# பிச்சைக்காரி



ஆடையும் பொத்தலடா - அவள்
ஆடையும் பொத்தலடா
வாடித் துடிக்கும் மனமுமோர் பொத்தலாய்
வந்திடவோ பிறந்தாள்.

ஆறக்குடிலுமில்லை - இளைப்
பாறக்குடிலுமில்லை
பாறும் பசையற்ற பொய்க்குடில் தன்னொடும்
பாவியுமேன் பிறந்தாள்.

வற்றல் மரமெனலாம் - உடம்பை
வற்றல் மரமெனலாம்
உற்றவர்இன்றித் தனிமர மென்னவே
ஊரினிலேன் பிறந்தாள்.

கண்கள் குழிந்திருக்கும் - அவள்
கண்கள் குழிந்திருக்கும்
புண்கள் குழிந்துமே ஈமொய்க்க இங்கிவள்
பூமியில் ஏன்பிறந்தாள்.

நாயொன்று பின்தொடரும் - அவளை
நாயொன்று பின்தொடரும்
மாயஉடலை மரணம் தொடர்ந்திட
மாதிவளேன் பிறந்தாள்.

## கதைப் பாட்டு - மரமும் சிறுவனும்

### மரம்



ஓலையோடு பாளை உண்டு
உற்ற பசுங் காயும் உண்டு
பாலைத் தரும் பழமும் உண்டு
பார்க்க நல்ல குருத்தும் உண்டு
வீடு கட்ட மரந் தருவேன்
வேலி கட்டக் கயி றாவேன்
ஏலு மானால் என்றன் பேரை
எடுத்துக் கூறு பார்க்கலாம்.

### சிறுவன்

என்னைப் போல ஓடி ஆட
இங்கு னக்கு ஆகு மோ
கிளையு மில்லைக் கொப்பு மில்லை
கிட்ட வரவும் முடியுமோ
அழுக்கு நீரைக் குடித்துமே
இனிப்பு நீராய்த் தருகிறாய்



தென்னை தென்னை என்று உன்னைத்
தேய மெல்லாம் சொல்லுமே

# விலங்குக் காட்சிச் சாலை



விலங்குக் காட்சிச் சாலையாம்
விலங்குக் காட்சிச் சாலையாம்
விரைந்து வாரும் பார்க்கலாம்
விரைந்து வாரும் பார்க்கலாம்.

காட்டில் வாழும் யானையுண்டு
கரடி முயல் சிங்கம் உண்டு
ஓட்டமிடும் மான்களுண்டு
ஒட்டகச் சிவிங்கியுண்டு

சீறிவரும் புலியுண்டு
சிறுத்தையுண்டு பன்றியுண்டு
ஏறித்தாவும் குரங்குண்டு
இன்னுமின்னும் பலவுண்டு

அன்னமோடு கொக்குமயில்
ஆந்தை கிளி தானுமுண்டு
என்ன என்ன பறவையுண்டு
இவற்றை யெல்லாம் பார்க்கலாம்.

நண்ணு மாமை நச்சுப் பாம்பு
நடுங்க வைக்கும் முதலையுண்டு
வண்ண வண்ண மீன்களுண்டு
வாரும் நீரும் பார்க்கலாம்.

கொடுமையான விலங்குகள்
கூட்டினுள்ளே நிற்குமே
கொடுமை யற்ற விலங்குகள்
கூடிக் கூடித் திரியுமே.

# சிங்கமும் சுண்டெலியும்



தக்க பெரியதோர் சிங்கமடா - அது
தாவியே பாய்ந்திட வல்லதடா
மொக்கு நிறைந்த மரநிழலில் - அது
மூச்சு விட்டே துயில் கொண்டதடா

ஓங்கிய கொப்பினிற் சுண்டெலியும் - ஒன்று
ஓடி விளையாடி நின்றதடா
தூங்கிய சிங்கம் முதுகினிலே - அது
துள்ளி விழுந்துமே விட்டதடா

கோபங் கொண்டே சிங்கம் - மற்றதைக்
கொன்றிட வந்தது சுண்டெலியும்
ஆபத்து வேளையில் யானும் - உதவுவேன்
ஐயா பொறுத்தருள் என்றதுவே

சிங்கம் பொறுத்தது சுண்டெலி - வாழ்ந்தது
சென்றன பற்பல நாள்களடா
சிங்கமும் வேடர்களிட்ட வலையினிற்
சிக்கியே நொந்து தவித்த தடா

சுண்டெலி அங்கு சுறுக்கெனவே - வந்து
கண்டு கயிற்றை அறுத்ததடா
பண்டைய நன்றி மறவாத - சுண்டெலி
பண்புகள் பாடிட  வேண்டுமடா

# ஆடும் நரியும்



வஞ்ச நரியொன்று - நாக்கு
வரண்டு தாகத்தால்
துஞ்சித் துடிதுடித்தே - எங்கும்
சுற்றித் திரிந்ததுவே.

திரிந்த வேளையிலே - அதுவுஞ்
சிதைந்த தோர் கிணற்றை
தெரிந்து கொண்டதுவே - பார்த்துச்
சிந்தை மகிழ்ந்ததுவே.

சிந்தை மகிழ்ந்தநரி - பாய்ந்து
சேற்று நீரதனை
முந்திக் குடித்ததுவே - தாகம்
முற்றும் தீர்ந்ததுவே

தாகம் தீர்ந்ததுவும் - மேலே
தாண்ட இயலவில்லை
ஆகம் நொந்திடவே - நரி
அங்கு நின்றதுவே

அங்கு நிற்கையிலே - ஓர்
ஆடு வந்ததுவே
பங்கப் படுநரியும் - அதனைப்
பார்த்துச் சிரிக்குமே

எந்தனருந் தோழா - இங்கே
இனிய நீருண்டு
வந்து குடித்திடுவாய் - உன்றன்
வாட்டம் தீர்த்திடுவாய்

வாட்டந் தீர்த்தி டென்றே - நரி
வருந்திக் கூப்பிடவே
கேட்ட ஆடுந்தான் - தொங்கிக்
கிணற்றுள் குதித்ததே

கிணற்றுள் நின்ற நரி - ஆட்டின்
கிட்டவந் தேறி
அணைத்துக் காலூன்றிப் - பாய்ந்து
அப்புறம் போனதுவே

தஞ்சமில்லா ஆடு - கிணற்றுள்
தங்கி நின்றதுவே
வஞ்சகருக் குதவில் - என்றும்
வருந்த நேரிடுமே.

ஆகம் = உடல், மனம்

## காவற்குரங்கு



முன்னமொரு நாட்டினையோர்
முடியரசன் ஆண்டான்
முறையான காவலனாய்க்
குரங்கொன்றை வளர்த்தான்.

தன்னரிய காவலனாம்
குரங்கினது கையில்
தந்துவைத்தான் கூரான
வாளொன்றை அவனும்

என்படுக்கை அறையினுளே
எவரேனும் வந்தால்
இருதுண்டாய் வெட்டென்றே
கட்டளையும் இட்டான்


மன்னவனும் மற்றொருநாள்
தனைமறந்து துயின்றான்
மருங்கினிலே குரங்காரும்
காவலுக்கு நின்றார்

அன்னபொழு தாங்கேயோர்
இலையானார் வந்தார்
அரசனது உடலினிலே
அவரமர்ந்து கொண்டார்

பின்விளைவை அறியாத
பேதைமதிக் குரங்கார்
பிடித்திருந்த வாளாலே
இலையானைத் தடிந்தார்

மன்னவனும் இருதுண்டாய்
மாண்டுமடிந் தனனே
மதியற்றார் படைகொண்டால்
மக்களெலாம் அழிவார்.

# காந்தித்தாத்தா



பாரதத்தின் தந்தையடா காந்தித்தாத்தா
பண்புடைய தெய்வமடா காந்தித்தாத்தா
நேரெவரும் இல்லாதார் காந்தித்தாத்தா
நெஞ்சிலிடம் கொண்டவர்காண் காந்தித்தாத்தா

அன்பின் வடிவமடா காந்தித்தாத்தா
அகிம்சை அவர் கொள்கையடா காந்தித்தாத்தா
துன்பந் துடைத்தாரே காந்தித்தாத்தா
தூயநல் வாழ்வு தந்தார் காந்தித்தாத்தா

சத்தியத்தின் பாதையிலே காந்தித்தாத்தா
சால்புடனே வாழ்கவென்றார் காந்தித்தாத்தா
உத்தமர்க்குள் உத்தமர்காண் காந்தித்தாத்தா
உழைப்பால் உயர்வு கண்டார் காந்தித்தாத்தா

சிக்கனமாய் வாழ்கவென்றார் காந்தித்தாத்தா
சிறுமைகள் தீருமென்றார் காந்தித்தாத்தா
தக்கவுயர் நாகரிகம் காந்தித்தாத்தா
தாரணிக்கே அதுவென்றார் காந்தித்தாத்தா

# முஸ்லிம் பெரியார் டாக்டர். டி.பி. ஜாயா



யாவரும் போற்றும் பெருமகனாம் எங்கள்
ஜாயா புகழ்தனைப் பாடிடுவோம்
காவல னாகியே முஸ்லிமின் கல்வியைக்
கட்டி வளர்த்த திறம்புகழ்வோம்

மாண்புறு கண்டியில் வந்தவராம் உயர்
வரிசை பற்பல கொண்டவராம்
ஏண்பெறு நல்லுடல் கல்வி செல்வமவை
ஏழைகள் வாழ்வுக்கே ஈந்தவராம்

ஆயுள் முழுதும் ஒளிவிடு தாரகை
ஆகி உழைத்த குருமணியாம்
ஏயநற் பண்பு பழக்க வழக்கம்
இன்சொல்லும் கொண்ட திருமகனாம்

மக்கள் தலைவனுக் குள்ள சிறப்புகள்
மன்னி விளங்கிய சான்றோனாம்
மக்கா நகரில் இலங்கையர் இல்லம்
வகுத்திட வந்த தலைமகனாம்.

## விபுலானந்த சுவாமி



வித்தகமெய் ஞான
விபுலானந்த சாமி
வேதாந்த சித்தாந்த
சமரசமெய் ஞானி

தத்தும்அலை முத்தமிடு
மட்டுநகர் தந்த
தமிழ்முனிவர் எங்கள்விபு
லானந்த சாமி

முத்தமிழைக் கற்றுணர்ந்த
மூதறிவு தன்னால்
முதன்மைபெறு யாழ்நூலை
முன்பளித்த சாமி

அத்தனடி சூட்டிடவே
அன்புமலர் மூன்றை
ஆராய்ந்து கண்டுதந்த
அழகுதமிழ்ச் சாமி.